# “முரண்பாடுகளை கையாளுதல்” முஹம்மது நபி (ஸல்) அவர்களின் ஸீராவை அடிப்படையாகக் கொண்டதோர் ஆய்வு

**MTM Rizvi**

Senior lecturer Gr I in Islamic Studies, Eastern University Sri Lanka
abuagar73@yahoo.com /0776065144

**ஆய்வுச் சுருக்கம்**

இன்று மனித வாழ்வின் எல்லா விடயங்களிலும், குடும்ப மற்றும் சமூக வாழ்வு முதல் சமயம், அரசியல், பொருளாதாரம், கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் என அனைத்து விடயங்களிலும் முரண்பாடு என்பது ஒரு சாதாரன அம்சமாக மாறியுள்ளதைக் காணலாம்.ஒன்றுக்கு மேற்பட்ட தனிநபர்கள் அல்லது குழுக்கள் அவரவர்களது தேவை, நோக்கம், இலக்கு, நம்பிக்கை, விழுமியம், விருப்பு போன்றவைகளை புரிந்து கொள்வதன் அடிப்படையில் தோன்றுகின்ற இணங்காத்தன்மை அல்லது கருத்து வேறுபாடு முரண்பாடு எனப்படுகிறது.முரண்பாட்டைக் கையாளுதல் என்பது முரண்பாட்டுக்கான தீர்வை பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறைகளுடன் கூடிய செயன்முறைகளாகும். முரண்பாட்டை நுட்பமாகக் கையாள சிறப்புச் தேர்ச்சியுள்ளவர்கள் தேவை. மதம், இனம், மொழி, இடம், அந்தஸ்து, அரசியல் ,பொருளாதாரம், கலாசாரம்,பன்பாடு, பழக்க வழக்கங்கள் போன்ற தனிமனித, சமூக வேறுபாடுகள் முரண்பாடுகளுக்கான காரணிகளாகக் கருதலாம். முரண்பாடுகள் பல்வகை தன்மை கொண்டவை என்ற வகையில் முரண்பாடுகளை எப்படி துள்ளியமாக கையாளுவது, என்பதை முஹம்மத் நபியவர்கள் ஓர் பன்முக ஆளுமை, ஏனைய ஆளுமைகளைப் போலல்லாது இறை வழிகாட்டலில் முன்மாதிரிகளை உலகிற்கு தந்த மாமனிதர். ஏன்ற வகையில் மனித வாழ்வுக்குத் தேவையான அத்தனை விடயங்களுக்கும் அவர்களிடமிருந்து முன்மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்ற வகையில், அவர்கள் முரண்பாடுகளை எப்படி கையான்டார்கள் என்பதை மாத்திரம் கண்டறியும் வகையில் இவ் ஆய்வு வரையறுக்கப்பட்டுள்ளது.முரண்பாடுகள், அதனைக் கையாளுதல், அதனை முகாமைத்துவம் செய்தல், தீர்வு காணுதல் எப்படி என்பது பற்றிய ஆய்வுகள் மற்றும் அவை தொடர்பான பொதுவான கட்டுரைகள் நிறையவே காணக்கிடைக்கின்றன. தனிமனித ஆளுமைகளின் வாழ்வினை தோடர்பு படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மிகக் குறைவே எனலாம்.

**திறவுச் சொற்கள்:** ஸீரா, வஹி, முரண்பாடு,கையாளுதல், பொறிமுறை, தீர்வு

**ஆய்வு அறிமுகம்**

இன்று மனித வாழ்வின் எல்லா விடயங்களிலும் முரண்பாடு என்பது ஒரு சாதாரன அம்சமாக மாறியுள்ளதைக் காணலாம். குடும்ப மற்றும் சமூக வாழ்வு முதல் சமயம், அரசியல், பொருளாதாரம், கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, பழக்வழக்கங்கள் என அனைத்து விடயங்களிலும், அவைகளுடன் தொடர்புரும் சாராரும், தொடர்புராதவர்களும் கூட முரண்பட்டுக் கொள்வதை பார்க்க முடியும்.

இதன் பயனாக தர்க்கம் ஏற்பட்டு அவை குதர்க்கமாக உருவெடுத்து பிளவுகளை நோக்கி நகர்ந்து சன்டையும், போருமாக மாறி முடிவில் அழிவும் சேதமும் மாத்திரமே மிஞ்சுவதை புரிய முடிகிறது.

முரண்பாடு ஏற்படுவது இயல்பே என்றிருந்த போதிலும் அது ஏற்பட்டால் அதன் தன்மை,பாரதூரம் என்பவற்றுக்கு ஏற்ப அதனை கையான்டு தீர்வு காண்பது என்பதும் இயல்பானதாகும். அதாவது **முரண்பாடு** என்பது ஒரு விடயம். அதனைத்தீர்த்து வைப்பதற்காக அதனைக் **கையாளுதல்** என்பது மற்றொரு விடயம். இரண்டுமே இருவேறு கோணங்களில் நோக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

முரண்பாடு என்பதற்கு பல்வேறு கருத்தியல்கள் முன்வைக்கப்படுகின்றன. இணங்காமை,கருத்து வேற்றுமை,ஏற்றுக் கொள்ளாமை என்பன போன்ற நேரடி அர்த்தம் கொண்டதே முரண்பாடு என்பதாகும். அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட தனிநபர்கள் அல்லது குழுக்கள் இவர்களுக் குள்ளேயோ அல்லது வெளியேயோ அவரவர்களது தேவை,நோக்கம்,இலக்கு, நம்பிக்கை, விழுமியம், விருப்பு போன்றவைகளை புரிந்து கொள்வதன் அடிப்படையில் தோன்றுகின்ற இணங்காத்தன்மை அல்லது கருத்து வேறுபாடு முரண்பாடு எனப்படுகிறது.

முரண்பாட்டைக் கையாளுதல் என்பது முரண்பாட்டுக்கான தீர்வை பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறைகளுடன் கூடிய செயன்முறைகளாகும். இது மனித ஆளுமையுடன் தொடர்புடைய விடயமுமாகும். அதாவது முரண்பாடுகள் ஏற்படும் பொழுது அல்லது ஏற்பட்டதோர் முரண்பாட்டை எவ்வாறு கையாளுவது என்பதைப் பொறுத்தே ஒருவரது ஆளுமை கூட தீர்மானிக்கப்படுகிறது.

முரண்பாடு என்பது மனித வர்க்கத்துடன் மாத்திரம் தொடர்புற்ற ஒன்று மாத்திரமின்றி ஏனைய உயிரினங்களுடனும் தொடர்புபட்டதுமாகும். இறிப்பினும் முரண்பாடுகளை சரியாக கையாளுகின்ற அறிவும் ஆற்றலும் மனிதனுக்கு மாத்திரமே உண்டு. ஆனாலும் மிருகங்கள்,பறவைகள் தொடர்பான கதைகள் பலதைப் படிக்கும் பொழுது, கற்பனையாக கதை கூறும் எழுத்தாளர்கள் அவைகளுக்குள் ஏற்படும் முரண்பாடுகள், அதற்கான தீர்வுகளை கானும் விதங்களை சுவாரிஷ்யமாக முன்வைப்பதை பார்க்கிறோம். அங்கு முரண்பாடுகளை கையாளுவதில் சிங்கம், நரி உயர் பாத்திரம் வகிப்பதை அறிகிறோம். அக்தைகள் கூட மனிதனுக்கு முன்மாதிரியாகவே எழுதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

முரண்பாட்டை நுட்பமாகக் கையாள சிறப்புச் தேர்ச்சியுள்ளவர்கள் தேவை.அதனைக் கையாளுகின்றவர்கள் அறிவு, அனுபவம், அ்.லாக், ஆன்மீகம், ஆளுமை போன்ற பண்புகளைப் பெற்றிருப்பது அவசியமாகும். உலகில் பலர் முரண்பாடுகளை கையாளுதல் குறித்து வாழ்விலும், எழுத்திலும் முன்மாதிரிகளை விட்டுச் சென்றிருந்த பொழுதும். கி.பி.7 ஆம் நூற்றாண்டில் மக்கா மற்றும் மதினாவில் வாழ்ந்த இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இது விடயத்தில் காட்டியுள்ள முன்மாதிரிகளை அவைகள் விஞ்சிவிடமுடியாது. எனவே முஹம்மது நபியுடைய வாழ்விலிருந்து இந்த ஆய்வின் ஊடாக அதனைப் பெற்றுக்கொள்ளவும் கற்றுக்கொள்ளவும் முடிகிறது.

**ஆய்வின் நோக்கம்**

- முரண்பாடுகள் தோன்றுவதும், அதற்கான தீர்வுகளை காண்பதும் அல்லது தீர்வுகள் காணப்படமாலேயே ஆகிவிடுவதையும் இன்று சாதாரண நிகழ்வுகளாக மாறியுள்ள சூழலில் முரண்பாடுகளை எப்படி துள்ளியமாக கையாளுவது,தீர்வுகளை காணாத பொழுது ஏற்படக் கூடிய விளைவுகள் என்ன என்பதை முஹம்மது நபி அவர்களின் ஸீராவிலிருந்து வெளிக் கொணரல்.
- முரண்பாடுகள் பல்வகை தன்மை கொண்டவை என்ற வகையில் அவ்வகைகளை சுட்டிக்காட்டுவதும், அதன் தன்மை,இயல்பு,பாரதூரம்,முக்கியத்துவம் இவைகளுக்கு ஏற்ப எப்படி முஹம்மது நபி (ஸல்) அவைகளைக் கையான்டு தீர்வு கண்டார்கள் என்பதை அறிதல்.
- முரண்பாடு ஏற்படாமல் இருப்பதற்கான வழிமுறைகள் யாவை ? முரண்பாடுகளைக் கையாள வஹி சார் அறிவு, உலக பொது அறிவு, மற்றும் சமயோசித அறிவுகளின் தேவை எந்தளவு

முக்கியத்துவம் பெருகின்றது என்பதை அறிந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டு இவ் ஆய்வு மேற் கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுப்பிரச்சினை**

மதம், இனம், மொழி, இடம், அந்தஸ்து, அரசியல் ,பொருளாதாரம், கலாசாரம்,பன்பாடு, பழக்க வழக்கங்கள் போன்ற தனிமனித, சமூக வேறுபாடுகள் முரண்பாடுகளுக்கான காரணிகளாகக் கருதலாம். இவை சார்ந்த பிளவுகளும், பிரச்சினைகளும் தான் இன்று எமது சகவாழ்வு, இருப்பு, இலக்கு, பாதுகாப்பு என அத்தனையையும் வெகுவாக பாதிக்கின்றது.

இவைகளுக்கான தீர்வுகளை பெறக்கூடிய ஆலோசனை, வழிகாட்டல் முன்மாதிரிகளை எங்கிருந்து, எவரிடமிருந்து பெற்றுக் கொள்வது என்பது கருத்து வேறுபாடுகளுடன் கூடிய விடயமாக இருக்கும் நிலையில் எல்லோருக்கும் பொதுவான இறைத்தூதர், வழிகாட்டி முஹம்மது நபியுடைய வாழ்வு முன்மாதிரியிலிருந்து முரண்பாடுகளை கையாளுதல் விடயத்தில் எப்படியான வழிமுறைகளைக் அவர்கள் கையான்டார்கள் என்பதே ஆய்வுப்பிரச்சினையாக இங்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**ஆய்வு வரையறை**

முஹம்மத் நபியவர்கள் ஓர் பன்முக ஆளுமை, ஏனைய ஆளுமைகளைப் போலல்லாது இறை வழிகாட்டலில் முன்மாதிரிகளை உலகிற்கு தந்த மாமனிதர் அந்த வகையில் மனித வாழ்வுக்குத்தேவையான அத்தனை விடயங்களுக்கும் அவர்களிடமிருந்து முன்மரிரிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்ற வகையில் அவர்கள் முரண்பாடுகளை எப்படி கையான்டார்கள் என்பதை மாத்திரம் கண்டறியும் வகையில் இவ் ஆய்வு வரையறுக்கப்பட்டுள்ளது.

**இலக்கிய முன் ஆய்வுகள்**

முரண்பாடுகள், அதனைக் கையாளுதல், அதனை முகாமைத்துவம் செய்தல், தீர்வு காணுதல் எப்படி என்பது பற்றிய ஆய்வுகள் மற்றும் அவை தொடர்பான பொதுவான கட்டுரைகள் நிறையவே காணக்கிடைக்கின்றன. அவற்றுள் அதிகம் அரசியல்,பொருளாதாரம், குடும்ப வாழ்வு, மற்றும் நிறுவனங்களில் ஏற்படும் முரண்பாடுகள், அதனைக் கையாளுதல் போன்றவைகளுடன் தொடர்புருத்தி ஏழுதப்பட்டவைகளாகும். தனிமனித ஆளுமைகளின் வாழ்வினை தோடர்பு படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மிகக் குறைவே எனலாம். அதுவும் இத்தலைப்பு தொடர்பில் தமிழ் மொழியினை விட ஆங்கிள மொழியில் எழுதப்பட்டவைகள் தான் அதிகம் எனலாம். William's J 2003 **"Hand Book of Conflict Management"**, Oliver Ramsbotham, 2011,**"Contemporary Conflict Resolution"**, Kevin Avouch, 1991 **"Conflict Resolution: Cross Cultural Perspective**, Fred E Jandt, 2016, **"Conflict Communication"**, Christopher W moore ,1991, **"The Mediation Process Practical Strategies for Resolving Conflict"** இத்தகைய நூல்கள் முரண்பாடு பற்றி பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்துள்ளது. அவைகளை உள்வாங்கிய நிலையிலுமாக இந்த எனது ஆய்வு முஹம்மத் (ஸல்) என்ற ஆளுமை எப்படி முரண்பாடுகளை கையான்டு தீர்வுகளைக் கண்டது என்பதை வெளிக் கொண்டு வருவதாகும்.இவ் எனது தலைப்புடன் கூடிய நூலகள்,ஆய்வுகள் மிகக் குறைவாகும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**ஆய்வு முறைமை**

இவ் ஆய்வுக்காக இஸ்லாம் மார்க்கத்தின் மூல நூல்களான அல் குர்ஆன் அல் கதீஸ் மற்றும் இது தழுவிய எனைய நூல்கள்,சஞ்சிகைகள்,இணையத்தளங்கள் மூலமான தகவல்கள திரட்டப்பட்டுள்ளன. பகுப்பாய்வு ஆய்வு முறைமை கையாளப்பட்டுள்ளன.

**ஆய்வின் முடிவுகளும் கலந்துரையாடல்களும்**

மனித வாழ்வொழுங்கில் பல்வேறு காரணிகள் அவர்களுக்கிடையே முரண்பாட்டுச் சூழலை ஏற்படுத்தி விடுகின்றன.அக்காரணிகள் சிலதை குறிப்பிட்டு, அக்காரணிகளுக்கு ஏற்ற சில நிகழ்வுகளை நபிகளாரின் வாழ்விலிருந்து அவற்றை அவர்கள் கையான்ட பாங்குடன் இங்கே இவ் ஆய்வுச் சுறுக்கத்தில் விரிவஞ்சி சுறுக்கமாக முன்வைக்கிறேன்.

**முரண்பாட்டுச் சூழலை ஏற்படுத்தும் காரணிகள்:-**

- **<u>சமய, சமூக மற்றும் பல்வேறு வேறுபாடுகள்</u>** -இன,மத,கொள்கை,நம்பிக்கை,கலாசார மற்றும் வழிபாட்டு வேறுபாடுகள் காரணமாகத் தோன்றியுள்ள பன்மைத்துவம் நிலை முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. **இந் நிலை நபியவர்களின் காலத்திலும் யூத, கிறிஸ்தவம், மஜூஸ், ஹனீப், முஷ்ரிக், ஷாபியி, என காணப்பட் மதப்பிரிவுகளுக்கிடையே தோன்றிய முரண்பாடுகளை தீர்ப்பதில் மதீனா சாசனம் என்ற அனுகு முறை தீர்வுக்கான கையாளுகையாக காணப்பட்டது.**
- **<u>அறிவு மற்றும் தெளிவான விளக்கம் இன்மை</u>**- தத்தமது மத கருத்துக்கள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகளைக் கூட தெளிவாக அறிந்து விளங்கி செயற்படாமை, மேலும் சகிப்புத்தன்மை இன்மை போன்ற நிலைகள் முரண்பாடுகளைத் தோற்று விக்கின்றன. **கஃபா வுடைய ஹஜருல் அஸ்வத் கல்ளை முத்தமிடல் விடயத்தில் நபியுடைய வழகாட்டல்..சில தோழர்கள் அதன் புனிதம் காரணமாக முரண்பட்டு முன்டியடித்து தானும் சங்கடப்பட்டு பிறரையும் சங்கடத்திற்குள்ளாக்கும் அச்செயலை நபியவர்கள் நெறிப்படுத்திய விதம்.**
- **<u>தொடர்பாடல் சிக்கல்கள்</u>**- முறையற்ற தொடர்பாடல், தவறான புரிதல்,மற்றும் புலனுணர்வு,மொழி ஆற்றல் இன்மை, காரணமாக முரண்பாடுகள் தோன்றுகின்றன **நபியவர்கள் ஒரு விடயத்தை சரியாக புரிந்து கொள்ளும் வகையில் பல போது அதனை மூன்று தடவைகள் கூறுவார்கள்.(ஆதாரம் புஹாரி)**
- **<u>தெளிவற்ற பொறுப்புக்கள்-</u>** தொழில் மற்றும் சமூக வகிபாகத்தில் அவரவரது பொறுப்புக்கள் சரியாக வரையறுக்கப்படாத பொழுது. **ஆம்ர் இப்னல் ஆஸ் (ரழி) என்ற தோழரை ஒரு பிரதேச தலைவராக ஆனுப்பி வைக்கும் பொழுது நபியவர்கள் அவரது பொறுப்புக்களை தெளிவாக கூறியனுப்பி வைத்தமை.**
- **<u>பதவி,அந்தஸ்து,உயர் நிலைகள்-</u>** அதாவது இந்நிலைகள் காரணமாக தனது செல்வாக்குகளை எல்லை கடந்து பிரயோகித்தல்,அதிகரிக்க முயலுதல் முரண்பாட்டுக்கான மற்றொரு காரணியாகும். **ஹஜ்ஜதுல் வதா இறுதி உரையில் ஒரு அரபி அஜமியை விடவோ,ஒரு கருப்பர் வெள்ளையரை விடவோ தக்வாவை (இறையச்சம்) கொண்டு அன்றி சிறப்புக்குறியவரல்லர் என்ற நபிகளாரின் தத்துவம்.**
- **<u>அதிகபட்ச்ச வேலைச்சுமை,ஏற்றத்தாழ்வு மன நிலை</u>** – ஒருவரை விட மற்றவரை,ஒரு குழுவை விட மற்ற குழுவை மதித்தல்,சுமைகளை ஏற்படுத்தல் போன்ற காரணிகள். முரண்பாடுகளை உண்டாக்கும்.
- **<u>வேறுபட்ட நோக்கங்கள், குறிக்கோள்கள்</u>** - ஓர் இடத்தில் வாழும் ஒரு சமூகம் தமது பன்மைத்துவ பன்புகளின் பயனாக வேறுபட்ட குறிக்கோள்களுடனும், தேவைகளுடனும் வாழ்வர். அவை மிகச்சரியாக நிவர்த்திக்கப்பட வேண்டும் என அவரவர்கள் எண்ணுவர். இந்நிலையில் அது நிறைவேற்றி வைக்கப்படாத பொழுது முரண்பாடுகள் தோன்றும்.**நபியவர்கள் பன்மைத்துவ மதத்தவர்களை ஆட்சி செய்த பொழுது அவர்களுக்கு**

**தத்தமது மதத்தை பின்பற்ற அனுமதித்தமை,தனது மார்க்கத்தை பின்னற்ற நிர்பந்திக்காமை,முன்னைய வேதங்களை விசுவாசிக்க கூறியமை..**

- <u>**குறைவான இட,நிதி,வளப் பங்கீடுகள்-**</u> பன்மைத்துவ சமூக ஒழுங்கில் நீதியாக,சமத்துவம் பேணி,ஒவ்வொருவருடைய உரிமைகளும் கருத்தில் கொள்ளப்பட்டு பங்கீடுகள் இடம் பெறல் வேண்டும். உரிமைகள் மறுக்கப்படும் பொழுது முரண்பாடுகள் தோன்றும்.**மதீனாவில் யுத்த கனீமத் பொருட்களை அன்சாரிகளுக்கும்,முஹாஜிர்களுக்கும் இடையே பகிரப்பட்டதில் அன்ஸாரிகளுக்கு சற்று அதிகம் வழங்கப்பட்டதை ஆட்சேபித்து எழுந்த முரண்பாட்டை நபியவர்கள் அதற்கான சரியான நியாயத்தை முன்வைத்து தெளிவு படுத்தியமை..**
- <u>**சமயப் பிரிவுகள் -**</u> சமயங்களுக்குள்ளேயே பல்வேறு குழுக்களும்,பிரிவுகளும் தோன்றி நம்பிக்கை, இறை வழிபாடு, கிரியைகள், அமுலாக்கம் கலாசாரம், போன்ற விடயங்களில் கொண்டுள்ள கருத்து வேற்றுமைகள் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் **நபியவர்கள் அனுப்பிவைத்த ஒரு குழுவுக்கு பனு குறைழா என்ற இடத்தை அடைய முன் அஸர் தொழு வேண்டாம் என்று கூறியனுப்பிய வார்த்தயை தோழர்கள் விளங்கிய விதம் ஈட்றில் நபியவர்கள் கையான்ட விதம், கூறிய தீர்ப்பு..**
- **குடும்ப வாழ்வு முறைகள் -** அதாவது கனவன் மனைவி இவர்களின் பண்புகள், தன்மைகள், பிள்ளை வளர்ப்பபு,உறவு நிலை ஒழுங்கு,ஒழுக்கம் சார் விதி முறைகள் மீறுகின்ற நிலை, பெற்றோர் புரக்கணிப்பு போன்ற மேலும் பல காரணிகள். **இது தொடர்பில் எழும் பிரச்சினைகளின் பொழுது குர்ஆனிய வஹியை அடியொட்டி நபியவர்கள் தீர்வு முன்வைத்தமை அத்தியாயங்களான பகரா,நிஸா,நூர் …..**
- **பொருளாதார வேறுபாடு** – சமூகச் சூழல் பொருளாதார ரீதியாக வேறுபட்டதாகும், ஏழை, பணக்காரன், உள்ளவன் ,இல்லாதவன் என்ற நிலைகள் **நபியர்வகளின் ஸக்காத்,இதர தர்மங்கள் மூலமான தீர்வுகள்**

**ஆய்வு முடிவுகளும் மும்மொழிவுகளும்**

1) மனித சமூகத்தில் பன்மைத்துவம் என்பது தவிர்க்க முடியாதது. அங்கு முரண்பாடு என்பதும் தவிர்க்க முடியாதது.
2) முரண்பாடுகளை பல் வேறு காரணிகள் தோற்று விக்கின்றன.அவைகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.
3) முரண்பாடுகளை கையாளுதல் மிக மிக இன்றியமையாதது. அவை துள்ளியமாகவும், துரிதமாகவும், அறிவு பூர்வமாகவும் மேற்கொள்ளப்படல் வேண்டும் அதற்கான அழகிய முன்மாதிரிகளை முஹம்மது நபியுடைய ஸீராவிலிருந்து மட்டுமே துள்ளியமாக பெற்றுக் கொள்ள முடியும்.
4) முரண்பாடடு வகைகள் வேறுபட்டவை **தனிநபர் முரண்பாடு, அக முரண்பாடு, குடும்ப முரண்பாடு, சமூக முரண்பாடு,அரசியல் முரண்பாடு,சமய முரண்பாடு,இன முரண்பாடு, கொள்கை முரண்பாடு, நிறுவன முரண்பாடு, மனித விலங்கு முரண்பாடு** இப்படியான பல்வேறு முரண்பாடுகளுக்கும் தீர்வுவைப் பெற்றுக்கொள்ள சிறந்த வழி முறை முஹம்மது நபியுடைய ஸீராவிலேதான் உண்டு.
5) முரண்பாடுகளை மனித குலத்திற்கு கிடைத்துள்ள சமய பாரம்பர்யங்களிளிருந்துதான் தீர்க்கலாம்.
6) சமூகத்தில் காணப்படும் பொதுவான அறிவின்மையும் குறிப்பாக தான் சார்ந்ததும் பிறதும் மதங்கள், மொழிகள் பற்றிய போதிய அறிவின்மையுமே முரண்பாடுகளுக்கு பிரதான காரணமாக இருக்கின்றது.

7) உலகத்தினதும்,எம் நாட்டினதும் நாட்டு மக்களதும் பொதுவான நலனுக்காக அனைத்து சமூகங்களும் இணைந்து கூட்டு பங்களிப்பை வழங்கலாம். அத்துடன் கருத்து வேறுபாடான விடயங்களில் ஒருவருக்கொருவர் அனுசரித்தும், முரண்படும்தலங்களை இனங்கண்டும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து சகிப்புத்தன்மையுடன் வாழக்கூடிய சாதகமான சூழல் உருவாகும்.

**மும்மொழிவுகள்**

1) முரண்பாடுகளுக்கான காரணிகள், ஏற்படாது தடுப்பதற்கான பொறிமுறை அறிவை வழங்க அரசும், சமய தலைமைகளும் சமூக தலைமைகளும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற் கொள்ளவதுடன் இத்தகைய தலைப்புகளை பாடதிட்டத்திலும் சேர்ப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.
2) அனைத்து பிரதேசங்களிலும் சகல சமயத்தவரையும் ஒன்றினைத்து குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை அனைத்து சமயங்களையும் சார்ந்த பொதுவான நிகழ்ச்சிகளை நடாத்த வேண்டும். அத்துடன் பொதுவான நாட்டு நலன் சார்ந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கக்கூடியதும் பொதுவான சமூகப் பிரச்சினைகளை தீர்க்கக்கூடியதுமான ஒன்றியங்களை உருவாக்கி செயல்படுத்துதல் வேண்டும்.
3) ஆன்மீக கருத்தியல்களால் முரண்பாடுகளை கையாளுவது பயனளிக்கக் கூடியது என்ற வகையில் அனைத்து சமயத்தளங்களையும் பரஸ்பரம் தரிசித்து அவற்றின் செயற்பாடுகளை விளங்குவதற்கான ஏற்பாடுகளை தொடராகவும் முறையாகவும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறாக முயற்சிகள் ஒரு சமயத்தவரை பற்றி அடுத்த சமயத்தவர்களிடையே சந்தேகக்கண்கொண்டு நோக்கும் நிலையும் தப்பபிப்பிராயமும் இல்லாமற்போவதற்கு காரணமாக அமையும். சமயங்களின் மேல் மட்டத்தவர்களிடையே ஆரோக்கியமான நல்லுறவிற்கும் பரஸ்பர புரிந்துணர்விற்கும் வழிவகுக்கும்.
4) சகல ஊடகங்களும் சகவாழ்வையும் மதநல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பும் விதமாக தங்களது சகல நிகழ்சிகளையும் வடிவமைத்து நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் முரண்பாடற்ற தன்மை,மற்றும் ஐக்கியத்திற்கும் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும்.
5) பொது அரசியலிலும் சமூக வாழ்விலும் முரண்பாட்டு விடயங்களைப் பயன்படுத்துவதை முற்றாக தடுப்பதற்கும் தகுந்த சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் அரசும் நீதித்துறையும் பாதுகாப்புத் தரப்பு ஆகிய அனைவரும் ஆவண செய்ய வேண்டும்.
6) நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கக்கூடிய சிந்தனைகளை சமயப் பாரம்பரியங்களிலிருந்து ஆராய்ந்து பொருத்தமான முறையில் முன்வைக்கக்கூடிய ஆய்வுகளையும் மேற்கொள்ள வேண்டியது காலத்தின் இன்றியமையாத தேவையாகும்.
7) சகல சமயத்தவர்களும் தங்களது சமய தனித்துவங்களை பேணி சுதந்திரமாக செயற்படும் நிலையை அனைத்து அரச கல்வி நிலையங்களிலும் அரச காரியாலயங்களிலும் அரச கட்சிகளிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.
8) இஸ்லாமிய நம்பிக்கைகள், கோட்பாடுகள்,வணக்க முறைகள் பன்பாடு என அணைத்து விடயங்களிலும் அதனைப் பின்பற்றும் மக்களிடமும், அதனை பிரச்சாரம் புரியும் அழைப் பாளர் களிடமும் கூட விளங்கங்களை ஏற்படுத்த வேண்டும் இது முரண்பாடுகளை முகாமை செய் வதற்கும்,கையாளுவதற்கும் இலகுவாக அமையும்.

**உசாத்துணைகள்**

## Arabic


1. العشقلاني ابن علي بن حجر امام احمد 2000"**فتح الباري شرخ صحيح البخاري**"،دار السلام،ريال
2. ابن الحجاج مسلم ابو الحسين امام" 1996،**صحيح مسلم**"،دار العالم الكتب،ريال

3. ريال،دار العالم الكتب"**جامع الترمذي**1996،"امام ابو موسى محمد ابن عيسى الترمذي
4. ريال،دار العالم الكتب"**سنن ابن ماجة**1996،"امام ابو عبد الله محمد ابن يزيد
5. ريال، دار العالم الكتب""**سنن النسعي**"1996, امام ابو عبد الرحمن احمد ابن شعيب النسعي
6. سوريا دار الحدديث, "**سنن ابي داوود**"1969امام ابو داوود سليمان ابن الاشعت سجستاني
7. مصر،دار الكتب،"**سيرة النبوية**"1936 امام ابن هشام
8. بيروت،المكتبة الاسلامية،"**السيرة**"1999،امام ابن اسحاق
9. رياد مكتبة ابكان، "**عصر الخلافة الراشدة**"1996، اكرم ضياء العمري
10. ريال، دار التدمير،"**الرحيق المختوم**"2000، صفي الرحمن المبارك الفوري
11. بغداد"**اصول الدعوة**"1976،عبد الكريم زيدان
12. قطر،ادارة المناهج،"**السيرة**" 1992، عبد الحليم زيدان
13. " الجامعة الاسلامية باالمدينة المنورة "،**مختصر سيرة الرسول**"1956 امام محمدبنعبد الوهاب
14. دمشق، دار القلم، "**حياة الصحابة**" 1983، الشيخ محمد يوسف
15. مطابع الرشيد،المدينة المنورة، "**تاريخ مكةالمكرمة قديماوحديثا**"،2001 محمدالياسعبدالغني
16. مطابع الرشيد،المدينة المنورة، "**تاريخ االمدينة المنورة**"،2003 محمدالياسعبدالغني
17. المملكة العربية السعودية،" **السيرة النبوية وتاريخ الدولة الاسلامية** "1997،وزارة التربية والتعليم
18. அல்குர்ஆன்
19. எம்.ஏ.எம் மன்ஸுர், 1999. ''இனப்பிரச்சினை ஓர் இஸ்லாமிய கண்ணோட்டம'', மீள்பார்வை வெளியீட்டகம், கொழும்பு.
20. முஹம்மது றிழா 2010, ''முரண்பாடுகளை கையாளுதல்''ஓட்டமாவடி,இலங்கை
21. William's J 2003 "Hand Book of Conflict Management" UK